பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 05 2026 WEDNESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வியட்நாம் அதிபர் திரு. To Lam-முடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று பேச்சுவார்த்தை நடத்தினார்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 37ஆக உயர்த்தப்பட்டிருப்பது, நாட்டின் நீதித்துறை கட்டமைப்பை வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மேற்குவங்க மாநிலத்தில் வன்முறையில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- அஸ்ஸாமில் புதிய அரசு அமைப்பதற்கு ஏதுவாக முதலமைச்சர் திரு. ஹிமந்தபிஸ்வா சர்மா தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- தும்கூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<

வியட்நாம் அதிபர் திரு. To Lam-முடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

புதுதில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பு உறவுகள், பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பு குறித்து பேச்சுகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகவுள்ளன.

முன்னதாக, அதிபர் திரு. To Lam-க்கு பாரம்பரிய முறைப்படி குடியரசுத்தலைவர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வியட்நாம் அதிபர் திரு. To Lam இன்று மாலை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசவுள்ளார்.

>>>>>>><<<<<<

உச்சநீதிமன்றத்தில் கூடுதலாக 4 நீதிபதிகளை நியமனம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதனையடுத்து, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33லிருந்து 37ஆக உயர்கிறது.

>>>>>>><<<<<<

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த மத்திய அமைச்சரவை மேற்கொண்டுள்ள முடிவு நீதித்துறை கட்டமைப்பை வலுப்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மக்களுக்கு விரைந்து நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் உள்ள 19 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் பல்தட ரயில்வே திட்டங்கள் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

23 ஆயிரத்து 437 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் ஆறு முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் உள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Mathura, Nagda, Guntakal, Wadi, Burhwal, Sitapur ஆகிய நகரங்கள் இத்திட்டத்தால் வளர்ச்சி பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு வலுப்பெற்று, வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் சுற்றுலாத்துறைக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகளை எவ்வித சமரசமும் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

*மேற்குவங்க மாநில தலைமைச்செயலர், காவல்துறை தலைவர் மற்றும் மத்திய ஆயுதப்படையினருக்கு இதுதொடர்பாக அவர் பிறப்பித்துள்ள உத்தரவில், வன்முறையில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.*

*மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் சட்டம் ஒழுங்கை பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*அமைதியை சீர்குலைக்க முயல்வோர் குறித்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் காவல்துறையினருக்கு திரு. Gyanesh Kumar அறிவுறுத்தியுள்ளார்.*

*அம்மாநிலத்தில் தேர்தலுக்குப் பின் நடந்த வன்முறையில் 2 பேர் உயிரிழந்ததை அடுத்து, தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.*

*>>>>>>><<<<<<*

*தமிழகத்தில் த.வெ.க. புதிய அரசை அமைப்பது குறித்து, அக்கட்சியின் தலைவர் திரு. விஜய், தமக்கு எழுதியுள்ள கடிதத்தை பரிசீலித்து முடிவடுக்கவுள்ளதாக தமிழக ஆளுநர் திரு. Rajendra Vishwanath Arlekar தெரிவித்துள்ளார்.*

*தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், அரசியல் சாசன விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆட்சியமைப்பதற்கு அனைத்து வாய்ப்புகளும் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.*

*த.வெ.க. அறுதிப்பெரும்பான்மை பெறவில்லை எனினும், வெளியிலிருந்து இந்த தேர்தலில் வெற்றிபெற்ற இதர உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் அவரது கட்சி ஆட்சி அமைக்கலாம் என்றும் அவர் கூறினார்.*

*முன்னதாக, புதிய அரசுக்கான ஆதரவை சட்டப்பேரவை கூட்டத்தில் நிரூபிக்க வேண்டியது அவசியம் என்றும் திரு. Rajendra Vishwanath Arlekar தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<*

*அஸ்ஸாம் சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு, மீண்டும் அரசமைப்பதற்கு ஏதுவாக முதலமைச்சர் திரு. ஹிமந்தபிஸ்வா சர்மா தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

*குவஹாத்தியில் உள்ள மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு. லக்ஷமன் பிரசாத் ஆச்சாரியாவிடம் தமது ராஜினாமா கடிதத்தை திரு. ஹிமந்தபிஸ்வா சர்மா அளித்துள்ளார்.*

முன்னதாக இன்று காலை அஸ்ஸாம் தலைமை தேர்தல் அதிகாரி சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளை முறைப்படி, ஆளுநரிடம் அளித்துள்ளார்.

அம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 126 தொகுதிகளில் 102 தொகுதிகளில் வெற்றிபெற்ற பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சியமைக்கிறது.

>>>>>>><<<<<<

Suriname இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடு என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், இருநாடுகளுக்கும் இடையேயான பன்முக ஒத்துழைப்பு நீண்டகாலம் நீடிக்கும் என்றும் கூறியுள்ளார்.

Suriname-மின் வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக Suriname சென்றுள்ள டாக்டர் ஜெய்சங்கரை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Melvin Bouva விமான நிலையத்தில் வரவேற்றார்.

>>>>>>><<<<<<

திரைப்பட தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி மறைவுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், ஆர்.பி. சௌத்ரியின் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மூலம், தமிழ் திரையுலகில் காலம் கடந்து நிற்கும் திரைப்படங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் கொத்தவரங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் 33 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

இங்கிலாந்து கருவூலத்துறை தலைவர் Rachel Reeves உடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது உலக அளவில் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் இந்தியா - இங்கிலாந்து இடையேயான நிதிசார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் தொடர்புடைய பல்வேறு பொருளாதார விவகாரங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

ஈரான் உடனான பதற்றமான சூழலை விரைந்து முடிவுக்கு கொண்டுவர அந்நாட்டு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சண்டை நிறுத்தம் குறித்து விரைவில் உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும், தற்காலிகமாக Hormuz நீரிணைப் பகுதியில் போக்குவரத்தை நிறுத்த தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் இணைந்து உயிரி தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின பேரில், 3 பேருக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக என்.ஐ.ஏ. வெளியிட்டள்ள அறிக்கையில் பொது இடங்களில் அப்பாவி மக்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்த ஐ.எஸ். அமைப்பு திட்டமிட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்புடன் தொடர்புடைய ஹைதராபாதை சேர்ந்த சையத் அகமது முகைதீன், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசாத், முகமது சுஹேன் ஆகியோருக்கு எதிராக ஆயுதங்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் அகமதாபாத் என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்து.

>>>>>>><<<<<<

*தும்கூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Soha Sadiq-ஐ வென்றார்.*

*இப்போட்டியில், Kashish Bhatia, Laxmisiri Dandu ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>><<<<<<*

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது*

*ஹைதராபாதில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<*

*ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி இன்று சென்னை அணியை எதிர்கொள்கிறது.*

*தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*